**செ. கு. எண்: 181** **நாள்: 23.10.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 23.10.2018

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், காளிதிம்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சாமிநாதன் என்பவரின் மகள் செல்வி சிவரஞ்சனி என்பவர் தனது தாய் தந்தை மறைவுக்குப் பிறகு, தன்னுடைய சகோதரர் செல்வன் ஹரிபிரசாந்த்தை தொடர்ந்து படிக்க வைப்பதற்காக, கோவை அரசு கலைக்கல்லூரியில் தான் படித்து வந்த பி.ஏ படிப்பினை நிறுத்தி விட்டு, 100 நாள் வேலை திட்டத்திற்கு செல்வதாகவும், தனக்கு அரசு வேலையோ அல்லது தொடர்ந்து படிப்பதற்கு உதவியோ தமிழ்நாடு அரசு செய்ய வேண்டும் என்று ஊடகத்தின் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

செல்வி சிவரஞ்சனி அவர்களின் பேட்டியை தொலைகாட்சியில் 21.10.2018 அன்று காலை நான் பார்த்தேன். ஏழை எளிய மக்களின் நலனில் எப்பொழுதும் அக்கறை கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு, செல்வி சிவரஞ்சனி அவர்கள் தொடர்ந்து கோவை அரசு கலைக்கல்லூரியில் படிப்பதற்கும், அவருடைய சகோதரர் செல்வன் ஹரிபிரசாந்த் தாளவாடி உண்டு உறைவிடப்பள்ளியில் தொடர்ந்து படிப்பதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்கும். அவர்கள் இருவரும் தொடர்ந்து படிப்பதற்கு ஆகும் செலவை மாண்புமிகு அம்மாவின் அரசே ஏற்கும். இதற்கான உத்தரவை நான் பிறப்பித்துள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

\

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**